**தமிழ்ப் பட்டிமன்றக் கலைக் கழகம்**
**தேசிய தின விழா கொண்டாட்டங்கள்**

*தமிழ்ப் பட்டிமன்றக் கலைக் கழகம் நடத்தும் தொடக்கநிலை மாணவர்களுக்கான வார்த்தை, வாக்கிய மொழிபெயர்ப்புப் போட்டிகள் (ஆங்கிலம் – தமிழ்)*

*போட்டி குறித்த தகவல்கள்*
*தேதி – August 18, 2019 (ஞாயிற்றுக் கிழமை)*
*நேரம் - மாலை 2 முதல் 7 மணி வரை*
*இடம் – முதல் சுற்று - உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், 2,பீட்டி ரோடு, சிங்கப்பூர் 209954*
*இரண்டாம் சுற்று - அரங்கம், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், 2,பீட்டி ரோடு, சிங்கப்பூர் 209954*
*இரண்டு சுற்றுக்களும் இங்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் நடத்தப்படும்.*
*பிரிவுகள் –*
*முதல் பிரிவு: தொடக்க நிலை 1&2 - வார்த்தைகள் மொழிபெயர்ப்பு*
*(சர்வதேசப் பள்ளி மாணவர்களுக்கு 6, 7, 8 வயது வரை)*
*இரண்டாம் பிரிவு: தொடக்க நிலை 3&4 - வாக்கியங்கள் மொழிபெயர்ப்பு*
*(சர்வதேசப் பள்ளி மாணவர்களுக்கு 9, 10 வயது வரை)*
*மூன்றாம் பிரிவு: தொடக்க நிலை 5&6 - வாக்கியங்கள் மொழிபெயர்ப்பு*
*(சர்வதேசப் பள்ளி மாணவர்களுக்கு 11,12,13 வயது வரை)*
*நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.*
*குறிப்பு;*
*வார்த்தைகளும் வாக்கியங்களும் பொதுவாக நாம் அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் பொருட்கள், செய்யும் செயல்கள், பொதுவாக உள்ள சிங்கையின் சுற்றுலாத்தளங்கள் (உதாரணம்: சிங்கப்பூர் விலங்கியல் தோட்டம், பறவைகள் பூங்கா) உறவு முறைகள் ( family relationships)( father's younger sister--அத்தை, Mother's elder sister--பெரியம்மா ) இவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இரு மொழி கற்றலை மற்றும் அதன் உபயோகத்தை வளர்த்தல் இந்தப் போட்டிகளின் நோக்கம் ஆகும். கடந்த பல ஆண்டுகளாக இந்தப் போட்டிகளில் பங்கேற்றவர்களின் இரு மொழித் திறன் வளர்ந்திருப்பதை பெற்றோர் எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.*

*இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு புத்தகப் பற்றுச் சீட்டும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.*
*நிறைய மாணவர்கள் பரிசு பெறும் வகையில் போட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் பங்கு பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் வெற்றி பெறாவிட்டாலும் அவர்களை ஊக்குவிக்க ஒரு பரிசுப்பை வழங்கப்படும்.*
*மொழிபெயர்ப்புப் போட்டியில் பங்கு பெற விரும்புகிறவர்கள் ஆகஸ்டு 7ஆம் தேதி மாலை 8 மணிக்குள் கீழ்க்கண்ட அமைப்புக் குழு உறுப்பினர்கள் யாரேனும் ஒருவரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.*

*மாணவர் பதிவுக்கு பின்வரும் எண்களுக்கு வாட்ஸ்அப் பகிரியில் தொடர்பு கொள்ளவும்.*
***Dr.Raji Sreenivasan 90012290***
***Mr.Saravanan: 97844478***
***Dr.Ram - 83321430***
*பதிவு செய்துகொள்ளும் மாணவர்கள்/ பெற்றோர்/ ஆசிரியர் whatsappக்கு அனுப்ப வேண்டிய தகவல்கள்:*
***மாணவர் பெயர்:***
***பள்ளியின் பெயர்:***
***வகுப்பு:***
***அம்மாவின் கைபேசி எண் :***
***அப்பாவின் கைபேசி எண்:***
***ஒரு மின்னஞ்சல் முகவரி:***
*இதற்கு முந்தைய ஆண்டுகளில் நடந்த போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஆதரவளித்த பெற்றோர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*
*அந்தந்தப் பள்ளியின் ஆசிரியர்கள், கலந்துகொள்ளும் மாணவர்களின் பட்டியலை மொத்தமாக tamil2009nov@gmail.com and cc rajisreenivasan21@gmail.com முகவரிக்கு மின்னஞ்சலும் செய்யலாம். ஆனால் ஒவ்வொரு மாணவரின் பெற்றோரின் கைத்தொலைபேசி எண் மற்றும் ஒரு மின்னஞ்சல் முகவரி அவசியம் தேவை.*

*அல்லது பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் சார்பாக அழைத்தும் பதிவு செய்யலாம்.* **எங்களால் கையாளமுடிந்த மாணவர்களின் எண்ணிக்கையை நாங்கள் முன்கூட்டியே எட்டிவிட்டால், பதிவு நிறுத்தப்படும். எனவே விரைவாகப் பதிவு செய்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**
போட்டிக்கு நுழைவுக் கட்டணம் இல்லை.
முதல் பிரிவு போட்டிகள் நடைபெறும் நேரத்தில் பெற்றோர்கள் கண்டு களிக்க எங்களிடம் ஏற்கெனவே பயிற்சி பெற்ற தொடக்க நிலை மாணவர்கள் பங்குபெறும் பட்டிமன்றம் நடைபெறும்.
பட்டிமன்றத் தலைப்பு:
**இருமொழிக் கற்றல் அனுபவத்தை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களா? ஆம். இல்லை.**

விதிமுறைகள்
*1.நாள் & இடம்*
*18 ஆகஸ்டு 2019 மாலை 2 முதல் 7 வரை, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பீட்டி ரோடு.*
*முதல் சுற்று வகுப்பறைகள்.*
*இரண்டாம் சுற்று அரங்கம்.*
*முதல் சுற்றில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெறுவார்கள்.*
*2. பிரிவுகள்*
*முதல் பிரிவு தொ.நிலை 1,2 ஆங்கில வார்த்தைகளுக்கு தமிழ் வார்த்தைகள். (சர்வதேசப் பள்ளிகளுக்கு வயது 6,7,8)*
*இரண்டாம் பிரிவு தொ.நிலை 3,4 வாக்கியங்களை மொழிமாற்றம் செய்தால் (சர்வதேசப் பள்ளி மாணவர்களுக்கு வயது 9,10*
*மூன்றாம் பிரிவு; தொ.நிலை 5,6 வாக்கியங்களை மொழிமாற்றம் செய்தல் (சர்வதேசப்பள்ளி மாணவர்களுக்கு வயது 11,12,13)*
*3. வருகைப்பதிவு நேரம்*
*எல்லா மாணவர்களும் 2 மணிக்கு வந்துவிடவேண்டும். 2.15க்கு வருகைப்பதிவு நிறுத்தப்படும்.அவர்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தாலும் 2.15க்கு மேல் வருகையைப் பதிவு செய்ய இயலாது.*
*பதிவு செய்தபின் அவர்களைத் தொண்டூழியர்கள், மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். பெற்றோர்கள் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பட்டிமன்றத்தை கண்டு களிக்கலாம்.*
*4. போட்டி முறை*
*போட்டியின் எல்லா அங்கமுமே வாய்மொழிதான். இந்தப் போட்டியின் நோக்கமே மாணவர்களுக்கு அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தை மற்றும் வாக்கியங்களை தமிழில் சொல்லத் தெரிகிறதா என்பதை அறிவதே.*
*முதற்சுற்றில் மாணவர்கள் தனித்தனியாக தேர்வு செய்யப்படுவார்கள்*
*20 மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாம் சுற்றுக்கு அனுப்பப்படுவார்கள்*
*இரண்டாம் சுற்று இரண்டு பேர்களைக் கொண்ட குழுவாகப் பிரிக்கப்பட்டு தேர்வு செய்யப்படும்.*
*குழுத்தேர்வு போட்டி அமைப்பாளர்களின் முடிவே ஆகும். குழுவுக்கு 10 நிமிடம் கால அவகாசம் தரப்படும் அந்த நேரத்திற்குள் குழு தங்களுக்குள் கலந்தாலோசித்து விடைகள் தரும் முறையை வகுத்துக் கொள்ளலாம்.*
*5. பரிசுகள்*
*வெற்றிபெறும் அனைவரும் கவர்ச்சியான புத்தகப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்*
*இரண்டாம் சுற்றில் வெற்றியைத் தவறவிட்ட மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசுகள் உண்டு*
*மூன்றாம் பரிசு ஒவ்வொரு பிரிவிலும் இருவர்*
*இரண்டாம் பரிசு. ஒவ்வொரு பிரிவிலும் இருவர்*
*முதல் பரிசு ஒவ்வொரு பிரிவிலும் இருவர்*
*நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது.*
*6.சிற்றுண்டி*
*முதற்சுற்று முடிந்ததும் எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படும்*
*7.மாணவர்களை விடுவித்தல்*
*முதல் பரிசில் வெற்றிபெறாத மாணவர்கள் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள். அவர்கள் பட்டிமன்றத்தில் அமரலாம்.*
*இரண்டாம் சுற்று மாணவர்கள் பரிசு பெற்றபின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.*
*8.பொது விதிகள்*
*எல்லா மாணவர்களும் அவரவர்களின் முழுமையான பள்ளிச் சீருடையுடன் வரவேண்டும்*
*அடையாள அட்டையை கண்டிப்பாக எடுத்துவரவேண்டும்*
*விதிமுறைகளில் ஏதேனும் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டால் போட்டியாளர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படும்*
*எல்லா மாணவர்களும் பெற்றோருடனோ அல்லது ஆசிரியர்களுடனோ அல்லது முழுமையான பாதுகாப்பாளர்களுடனோதான் வரவேண்டும்*

நிர்வாகக்குழு
தமிழ்ப் பட்டிமன்றக் கலைக் கழகம்